பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 26 செவ்வாய்க்கிழமை 10.08.2021 கதிர் 278

### இது ரகசியம் அல்ல!

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள்.

அமுல் பேபியின் தவறான ஆட்டங்களுக்கு ஒத்து ஊதிய பிரதேச செயலரான அம்மணி அந்த வழியில் தப்பு ஆட்டம் ஆடி இப்போது உயர்நீதிமன்றத்தில்

பக்கம்02

# உச்சத்தைத் தொட்ட சாவு; ஒரே நாளில் 111 பேர் காவு

## இலங்கையை இடைவிடாது வாட்டி வதைக்கும் கொரோனா



கொழும்பு, ஒகஸ்ட் 10

இலங்கையில் மேலும் 111 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்தவர்களில் 56 ஆண்களும், 55 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

☞ 2

## 2,953 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 953 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 32 ஆயிரத்து 947 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 161 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

☞ 2

## 14 நாள்களுக்கு இழுத்து மூடப்பட்ட மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

சுகாதார ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாது அளவுக்கு அதிகமான பக்தர்கள் வருகை தந்தமையால் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தை 14 நாள்களுக்கு மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, சுகாதார ஒழுங்குவிதிகளை மீறியமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்யவும், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் ஆலய பிரதமகுருக்கள் ஆகியோரை 14

☞ 2

### அதிபர்கள், ஆசிரியர்களின்

## சம்பள முரண்பாடு தொடர்பில் ஆராய ஐவர் அடங்கிய அமைச்சரவை உப குழு

அதிபர்கள் மற்றும் ஆசிரி-யர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில் முன்மொழிவுகளை ஆராய்ந்து அறிக்கையளிக்க ஐவர் அடங்கிய அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றைய அமைச்சரவையில் முன்வைத்த முன்மொழிவு தொடர்பில் ஆராய்ந்தே இந்த உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர்

☞ 2

## கடுமையான இறுக்கத்துடன் நல்லார் கந்தன் மகோற்சவம்

(ந.லோகதயாளன்)

யாழ்., நல்லைக் கந்தன் திருவிழாக் காலத்தில் தடை செய்யப்படும் வீதிகளின் ஊடாக அடியவர்களும் பயணிக்க முடியாதவாறு தடை செய்யத் திட்டமிடப்படுகின்றது.

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பிக்கும் நிலையில் கொரோனா அச்சம் காரணமாகத் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே உட்செல்ல

☞ 11

## பயணத்தடையை அமுல்படுத்தாவிட்டால் இந்தியாவின் நிலையே இலங்கைக்கும்!

### வைத்தியர்கள் சங்கம் அபாயச் சங்கு

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வேகமான அதிகரிப்பு காரணமாக வைத்தியசாலைகளின் செயற்பாடுகளில் தடங்கல் நிலை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. வைத்தியசாலைகளில் பாரிய அளவிலான ஒட்சிசன் தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, உடனடியாகப் பயணத்தடையை அமுல்படுத்தி மக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் இந்தியாவைப் போன்றதொரு மோசமான நிலைமை இலங்கையிலும் உருவாகும்.

– இவ்வாறு இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறித்த உண்மையான நிலைமைகளோ அல்லது டெல்டா வைரஸ் பரவலின் தன்மைகள் குறித்து சுகாதார தரப்பினரால் சரியான தரவுகளை முன்வைக்க முடியாதுள்ளது.

☞ 11

## யாழ்.தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி வைரவர் பொங்கலுடன் நிறைவுபெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

☞ 11

## யாழ்ப்பாணத்தில் கொரோனோவால் மேலும் ஐவர் சாவு

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குருநகரைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும், நாவற்குழியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும், உரும்பிராயைச்

☞ 2




## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போய் நிற்கும் அவலத்துக்குள் சிக்கியிருக்கின்றார்.

வீட்டுத் திட்ட விவகாரத்தில் சாவகச்சேரியில் நடந்த திருகுதாளம் இப்போது பரகசியம். அந்த விடயத்தை, அது தொடர்பான கூட்டத்தில் பகிரங்கமாகக் கிளப்பி, விவகாரத்தை அம்பலப்படுத்தியவர் திட்ட அதிகாரியான இளைஞர் ஒருவர். அதற்காக – அரசியல் பழிவாங்கலாக – அவரை சாவகச்சேரியிலிருந்து சண்டிலிப்பாய்க்கு இடம் மாற்றுவித்தார் அந்த பிரதேச செயலகத்துக்குப் பொறுப்பான அம்மணி. அமுல் பேபிக்காகத் தான் செய்த திருகுதாளங்களை அந்த இளைஞன் அம்பலப்படுத்தினான் என்ற சீற்றம். அதற்காகத் தான் இந்த இடமாற்றம்.

ஆளுநரைக் கொண்டே இந்த அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால் அது முள்ளை முள்ளால் எடுக்கின்ற வேலையாகும். அதை விடுத்து, நீதி முறையாக விடயத்தைக் கையாள முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அமுல் பேபியின் திருகுதாளங்களை ஒடுக்கி, நேர் சீராக்க வந்த தரப்புகளும், இந்த அரசியல் பழிவாங்கலை அரசியல் தலைமைத்துவத்தின் மூலம் திருத்தாமல் நீதி முறையாகத் திருத்தினால்தான், இதேபோல் அமுல்பேபியின் அட்டகாசத்துக்கு ஒத்து ஊதி, அநீதிக்குத் துணை போகும் அதிகாரிகள் எல்லோருக்கும் முன்மாதிரிப் படிப்பினை போதிக்கலாம் என்று தீர்மானித்தன.

இதனால் அந்த இளைஞனின் அரசியல் பழி வாங்கல் இடமாற்றத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல்மனுவைத் தாக்கல் செய்து, அம்மணியை நீதிமன்றுக்கு இழுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் (சுமந்திரன் அல்லர்) தலைமையில் ஒரு குழுவிடம் விவகாரத்தை கொழும்பு மேலிடம் ஒப்படைத்திருக்கின்றது. சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரான அம்மணியுடன் தொடர்புடைய சில கட்டடக் கணக்கு வழக்குகள், வீதி திருத்த செலவு விவரக் குளறுபடிகள் என்று எல்லாம் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிய்த்து உதறப்படவிருக்கின்றன.

சும்மா இருந்த சங்கை ஊதிக் கொடுத்த ஆண்டியின் கதை போல, நீதியாக நடந்த அந்த இளம் அரச ஊழியரை அமுல் பேபி மீதான அதீத விசுவாசம் காரணமாக இடமாற்றம் செய்யப் போய், இப்போது தன் மீதான ஊழல், குளறுபடி குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் உயர்நீதிமன்றத்தில் பதில் கூற வேண்டிய நிலைமை அம்மணிக்கு.

வடக்கில், இப்படித் தவறான விடயங்களுக்குத் துணை போகும் ஒவ்வொரு அதிகாரிகளையும் கொழும்பில் நீதிமன்றங்களுக்கு இழுத்து நீதி புகட்டுவதற்காக மேலிட ஆசீர்வாதத்துடன் ஒரு சட்டக் கட்டமைப்பையே களத்தில் இறக்க ஏற்பாடுகள் தயார்.

அரச அதிகாரிகளைப் பொறுத்தவரை அமுல் பேபி அல்ல விடயம். மக்கள் சேவையே அவர்களுக்கு மகேசன் சேவையாக இருக்க வேண்டும். அதில் அந்தக் கடவுளான மகேசன் தவறிழைத்தாலும் விரைந்து நீதிமன்றத்துக்கு இழுத்துப் பாடம் புகட்ட ஏற்பாடுகள் தயார்.

மகேசன் தீர்ப்பு என்றதும்தான் ஒரு விடயம் நினைவுக்கு வருகின்றது. வடக்கு, கிழக்கு மீள்குடியேற்ற விவகாரங்களைக் கையாள்வதற்காக அரசுப் பிரதிநிதியாக ஒருவர் அமைச்சரவை அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டார் அல்லவா? அது குறித்து எழுத்த மூலம் தனக்கு ஓர் அறிவுறுத்தலும் வரவில்லை என்று யாழ்.அரச அதிபர் மகேசன் பல இடங்களிலும் புலம்பித் திரிகின்றார் என ஒரு தகவல்.

இப்போது வீடமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர், மேற்படி பதவிக்கு காசிலிங்கம் கீதநாத் என்பவர் அமைச்சரவை அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளார், அவருக்கு முழு ஒத்துழைப்பு வழங்குங்கள் – என்று வடக்கு, கிழக்கில் உள்ள அரச அதிபர்கள் அனைவருக்கும் ஒரு சுற்று நிரூபம் அனுப்பியிருக்கின்றார்.

அது மாத்திரமல்ல, வீட்டுத் திட்ட விடயங்களில் அரசாங்கத்தின் மீள்குடியேற்றப் பிரதிநிதிக்கு உள்ள அதிகாரங்கள், பொறுப்புகள், கடமைகள் குறித்து நேரடியாக அரச அதிபர்களுக்கும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கும் விளக்கமளித்துப் புரிய வைப்பதற்கான உயர்மட்டக் கூட்டம் ஒன்று இன்று கொழும்பில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. எனினும் சம்பந்தப்பட்ட உயரதிகாரி ஒருவரின் சுகவீனம் காரணமாக இந்தக் கூட்டம் கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நடைபெற்றால் வீட்டுத் திட்டம் போன்றவற்றில் யாருடைய தாளத்துக்குத் தாங்கள் ஆடவேண்டும் என்பது அரச அதிபர்களுக்கும் – ஏன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர்களுக்கும் கூட – விளங்கி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில், யாழ்ப்பாணம், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து அரச உதவியுடனான வீட்டுத் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதல் கட்டக் கொடுப்பனவாக தலா இரண்டு லட்சம் ரூபா தொகை இன்று அவர்களின் வங்கிக் கணக்கில் சேர்ப்பிக்கப்படுகின்றது. இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – சர்ச்சை இல்லாமல் பயனாளிகள் தெரிவு, நீதி, நேர்மையாக நடந்த பிரதேச செயலர் பிரிவுகளுக்கு முதல் கட்டக் கொடுப்பனவு இன்று – முதலில் – கிடைக்கின்றது. குசும்புத் தனங்கள் இடம் பெற்ற பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இனி பட்டியல் இறுதி செய்யப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் இந்த முதல் கட்டக் கொடுப்பனவு. அது எப்போது என்பதை இப்போது சொல்ல முடியாது என்கின்றார் விடயமறிந்த ஒருவர்.

அடுத்தது – சுமார் 250 பேருக்கு – மொத்தம் ஐந்து கோடி ரூபா இன்று வழங்கப்படுகின்றது. இப்படி வழங்கப்படுவதைத் தனது திட்டமாக – வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு உடைப்பது போல – படம் காட்டிக் கொண்டிருந்த அமுல் பேபி இல்லாமலேயே இம்முறை பயனாளிகளின் வங்கிக் கணக்குக்கு பணம் நேரடியாகப் போகின்றது.

நல்ல மாற்றம்தான் போங்கள்...!

– மின்னல் –

## 14 நாள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாள்கள் தனிமைப்படுத்தப்படுத்தவும் அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தீர்த்தோற்சவத்தில் கலந்து கொண்டவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்துவதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டிருந்த நிலையில் அது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுந்திருந்தன.

ஆலய உற்சவம் தொடர்பாக கடந்த கொரோனா செயலணி கூட்டத்தில் 100 பேருக்கு அனுமதி வழங்கியிருந்த நிலையில், அது பின்பற்றப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஜ்.வாசுதேவன் தலைமையில் நேற்று நடைபெற்ற மண்முனை வடக்குக்கான கொரோனா செயலணிக் கூட்டத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அது குறித்து நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க, மட்டக்களப்பு மாநகர பிரதி ஆணையாளர் கே.சிவராஜா, மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் கிரிசுதன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் உட்பட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த பெண் ஒருவருமாக மூவர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

அத்துடன், அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மேலும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 153 ஆக உயர்வடைந்துள்ளது.

## சம்பள முரண்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பஸில் ராஜபக்ஷ, அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, டலஸ் அழகப்பெரும, மஹிந்த அமரவீர மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் இணையவழி தொழில்நுட்பத்தில் இடம் பெற்றது.

உப குழுவின் அறிக்கைக்கு அமைய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பள முரண்பாடு தொடர்பில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

5 மூத்த அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவை உப குழு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் விரைவில் கலந்துரையாடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உச்சத்தைத் தொட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்களில் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட 15 ஆண்களும், 06 பெண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 41 ஆண்களும், 49 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இதுவே நாட்டில் நாளொன்றில் பதிவான அதிகூடிய கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையாகும்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 222 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## 2, 953 தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 95 ஆயிரத்து 518 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir



# பஸ் போக்குவரத்துக்கள் நேற்று முதல் வழமைக்கு

நேற்று (திங்கட்கிழமை) முதல் இலங்கை போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பஸ் பயணங்கள் வழமைக்கு திரும்பியுள்ளன என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவன தெரிவித்துள்ளார்

கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதனால் அனைத்து ஊழியர்களும் வழமை போன்று சேவைக்கு சமூகமளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நிறைவு

மட்டக்களப்பு- அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம், ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெற்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இம்முறை கொடியேற்றம் செய்யாமல், அபிஷேக ஆராதனைகளுடன் ஆலய நிர்வாகம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களின் பங்கேற்புடன் வருடாந்த மஹோற்சவம், கடந்த 30.07.2021ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை, மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட யாக பூஜை, மூலமூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

அதன்பின்னர்வசந்தமண்டபத்தில்எழுந்தருளியுள்ள மாமாங்கேஸ்வரருக்கு, விசேட பூஜைகள் மற்றும் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஆகியன ஆலய வளாகத்திலுள்ள மாமாங்கேஸ்வரர் தீர்த்தக் குளத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும்நாட்டை முடக்கநேரிடும்!

## ஆளும்கட்சி எம்.பி. கட்டியம்

கொரோனாத் தொற்று நாளாந்தம் அதிகரித்து வருவதால், அடுத்த சில நாள்களில் நாட்டை முடக்க வேண்டி வரலாம் என ஆளும்கட்சி உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் இது கடினமான முடிவு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத் குமார சுமித்ராச்சி தெரிவித்தார். இருப்பினும், மக்களின் உயிரைக் காப்பாற்ற குறைந்தபட்சம் ஒரு குறுகிய காலத்துக்கு என்றாலும் நாட்டை முடக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

# றிஜ்வே வைத்தியசாலையில் 150 சிறுவர்களுக்கு சிகிச்சை

சுமார் 150 சிறுவர்கள் கொவிட்-19 தொற்றால் லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவற்றுள் ஒரு சிறுவர் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவின் 11 படுக்கைகளில் ஆறு படுக்கைகள் கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவர் நளின் கிதுல்வத்த கூறினார்.

தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து, 45 ஆயிரம் சிறுவர்கள் கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 20 ஆயிரம் பேர் 10 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

தொற்றுநோயால் 14 சிறுவர்கள் இறந்தனர்.

அறிகுறியற்ற மற்றும் இலகுவான அறிகுறிகளைக் கொண்ட கொவிட்-19 நோயாளிகளுக்கு வீட்டு அடிப்படையிலான தனிமைப்படுத்தல் மற்றும் மேலாண்மைக்கான வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சகம் கடந்த வாரம் வெளியிட்டது.

எனவே சிறுவர்களுக்கு அதிக காய்ச்சல், உணவு மற்றும் பானம் உட்கொள்ள இயலாமை, வயிற்றுப் போக்கு மற்றும் வாந்தி போன்ற கடுமையான அறிகுறிகளை அனுபவித்தால் மட்டுமே பெற்றோர்கள் சிறுவர்களை வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த ஜூலை 26 அன்று காலை, கொழும்பில் உள்ள லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை கொவிட்-19 நோயாளிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட விடுதி அதன் அதிகபட்ச திறனை எட்டியதாக அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 8 பிளாஸ்டிக் பொருள்களுக்கு புதிதாக வருகின்றதாம் தடை



சுற்றுச்சூழலுக்குத் தீங்கை ஏற்படுத்தும் மேலும் 08 பொருள்களைத் தடை செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்க இருப்பதாக நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற சுற்றாடல் துறை அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதில் பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டு, பிளாஸ்டிக் தட்டுக்கள், பிளாஸ்டிக் கோப்பைகள், பிளாஸ்டிக் கரண்டி போன்றவை உள்ளடங்குகின்றன என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். உணவைப் பொதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்களை தடை செய்யும் சட்டம் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் இங்கு வலியுறுத்தினார்.

இது தொடர்பான சுற்றிவளைப்புக்களை அதிகரிக்குமாறும் அவர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

தற்போதைய கொவிட் 19 தொற்று நோய் நிலையில் பயன்படுத்தப்படும் முகக் கவசங்கள் உரிய முறையில் அகற்றப்படாமை காரணமாக சமூகத்தில் சுற்றாடல் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே இங்கு சுட்டிக் காட்டினார். பயன்படுத்திய முகக்கவசங்களை உரிய முறையில் அகற்றுவது தொடர்பில் ஒழுங்குவிதியொன்றை அறிமுகப்படுத்தவிருப்பதாகவும், இது ஏற்கனவே தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்தது.

# வெடிபொருள்கள் திருடிய குற்றச்சாட்டுக்கள்; பாதுகாப்பு பிரிவினர் உட்பட நால்வர் கைது

வெலிசர விமானப்படை வெடிமருந்து சேமிப்பு நிலையத்திலிருந்து வெடி பொருள்கள் திருடப்பட்டன எனக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர்களில் இலங்கை விமானப் படை மற்றும் கடற்படையைச் சேர்ந்த இருவரும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருங்கல் குவாரிகளில் வெடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அம்மோனியம் நைட்ரேட் வெடிபொருள்களே நிலையத்தில் இருந்து திருடப்பட்டன என இலங்கை விமானப்படையின் ஒழுங்கு பிரிவின் இயக்குநர் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்தார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண கூறினார். அதற்கமைவாக களனி குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் புலனாய்வு நடவடிக்கைகளின் பின்னர் கடற்படை மற்றும் விமானப் படையின் உறுப்பினர்கள் இருவரையும், இரு வெளிநாட்டவர்களையும் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர்களிடம் 70 கிலோ கிராம் அம்மோனியம் நைட்ரேட் மற்றும் ஒரு ஓட்டோ என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளமையுடன், சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கல்முனையின் பிரபல சட்டத்தரணி பேரின்பராசா கொரோனாவால் சாவு

( வி.ரி.சகாதேவராஜா)

செட்டிபாளையத்தை பிறப்பிடமாகவும் கல்முனையை வதிவிடமாகவும் கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணி எம்கே.பேரின்பராஜா கொரோனாவால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் புகழ் பூத்த சிரேஷ்ட சட்டத்தரணியும் சமூக செயற்பாட்டாளரான இவர் கல்விப் புலத்தில் அதி சிறந்த ஆசிரியையும். புகழ்பூத்த அதிபருமான திருமதி அன்னபூரணம் அம்மணியின் கணவராவார். இவர்களது இரண்டு புதல்வர்களும் பொறியியலாளர்களாவர்.



கல்முனையில் சஞ்சீவன் கொலை வழக்கு உள்ளிட்ட பல மனிதஉரிமை வழக்குகளில் ஆஜராகி பிரபல்யமடைந்தவர்.

# செப்டெம்பர் முதல் வாரத்தில் பாடசாலைகள் திறக்கப்படா

## *சாத்தியம் இல்லை என்கிறார் கல்வி அமைச்சர்*

திட்டமிட்டதன் பிரகாரம் செப்டெம்பர் முதல் வாரத்தில் பாடசாலைகளை திறப்பதற்கான சாத்தியம் இல்லை என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீளத் திறக்க அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது என கடந்த வாரம் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

அத்தோடு பாடசாலைகளைத் திறப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என அழைப்பு விடுத்திருந்த நிலையில் கல்வி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வருகின்றது ஜெனிவாக் காய்ச்சல்

பழைய குருடி கதவைத் திறவடி என்ற மாதிரி மீண்டும் ஜெனிவாச் சமர் ஆரம்பிக்கப் போகின்றது. இன்னும் ஒரு மாத காலமே இருக்கின்றது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48ஆவது கூட்டத் தொடர் வரும் செப்ரெம்பர் 13ஆம் திகதி ஆரம்பமாகின்றது. முக்கிய விவகாரமாக இலங்கை விடயம் கவனத்தில் எடுக்கப்படவிருக்கின்றது.

கொரோனாத் தொற்றுப் பேரிடர் என்ற நெருக்கடியிலும், அதையொட்டியும், பிறவிடயங்களினாலும் நேர்ந்த மோசமான பொருளாதார இக்கட்டிலும் இலங்கை சிக்குண்டு கிடக்கையில் இந்த அழுத்தம் மீண்டும் வருகின்றது.

ஆனால் இந்த நெருக்கடிகளைக் காரணம் காட்டி யாரும் இலங்கை மீது பரிதாபப்பட்டு, பச்சாதப்பட்டு, ஜெனிவா விடயத்தில் மென்போக்காக நடந்து கொள்ளப் போவதில்லை.

கடந்த மார்ச்சிலும் – ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது கூட்டத் தொடர் நடந்த போதும் – இப்போது போன்ற கொரோனா நெருக்கடியும், பாதிப்பும், பின்னடைவும் இருக்கவே செய்தன.

அதற்காக எந்தத் தரப்பும் இலங்கை விடயத்தில் விட்டுக் கொடுக்கவோ, தயவு தாட்சண்யம் காட்டவோ முன்வரவில்லை.

கவுன்ஸிலில் 46ஆவது பொது அமர்வில் பல நாடுகளின் பிரதிநிதிகள் மெய்நிகர் முறைமையிலேயே கலந்து கொண்டனர்.

ஆனால் பிரிட்டன் தலைமையில் இலங்கை விடயத்தை முன்னெடுத்த இணை நாடுகள், இலங்கைக்கு எதிரான காட்டமான பிரேரணை ஒன்றை நிறைவேற்றச் செய்வதில் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் நின்று கடைசியில் சாதித்துக் காட்டத்தவறவேயில்லை.

இப்போதும் நிலைமை அதுதான் என்கின்றன விடயமறிந்த விட்டாரங்கள்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை கொண்டு வந்து, அதனைத் தீர்மானமாக நிறைவேற்ற வைத்த தரப்புகளும் நாடுகளும், அந்தத் தீர்மானத்தை மேலும் வலுப்படுத்தி, உறுதிப்படுத்தும் விதத்திலான புதிய பிரேரணை ஒன்றை மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்றச் செய்தவன் மூலம் பிற நாடுகளில் இருந்து இலங்கையைத் தனிக்கச் செய்யவும், சர்வதேசம் எதிர்பார்க்கும் ஜனநாயக, நீதி முறைமைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கையை வழிக்குக் கொண்டு வரப்பண்ணவும் ஆவன செய்ய வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளன.

அதனால் இம்முறையும் – அடுத்த ஒரு மாதத்தில் – இலங்கைக்கு எதிரான வலுவான பிரேரணை ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்பது பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

மேலும், மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை சர்வதேசம் எதிர்பார்க்கும் நியம அளவுக்கு இணங்கி வரமாட்டாது என்பதும் உறுதியாகி வருவதால், இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நீக்குவோம் என ஐரோப்பிய ஒன்றியம் பகிரங்கமாக தீர்மானித்து அறிவித்து விட்டது.

இது, இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானம் ஒன்றை இம்முறையும் எடுக்கச் செய்வதில் உறுதியாக இருக்கும் நாடுகள் மற்றும் தரப்புகளை மீளவும் ஊக்குவித்து, உற்சாகம் அளித்துள்ளது என்பது கவனிக்கப்படவேண்டும்.

ஆனால் இந்தத் தடவை ஜெனிவாக் காலம் என்பது இலங்கையின் ஆளும் தரப்புக்கு – அரசுக்கு மட்டும் – சவாலாக இருக்கப் போவதில்லை. மறுபக்கத்தில் ஒரு தரப்பான இலங்கைத் தமிழர்களுக்கும் கூட இது சவாலாகத்தான் அமையப்போகின்றது.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேசுவேன் என்று கூறிய புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் கடந்த பின்னரும் நேரடிப் பேச்சுகளை ஆரம்பிக்கவில்லை.

ஒரு தடவை திகதி தந்து விட்டு, அதை ஒத்திவைத்து இழுத்தடித்து வருகின்றார்.

ஜெனிவா நெருங்கியதும் – இலங்கைக்கு அங்கு சுருக்குக் கயிறு இறுகும் நிலை ஏற்பட்டதும் – இந்தச் சமயத்தில் பேச்சுப் பீலா என்ற கதையை மீள அவிழ்த்து விடுகின்றார் ஜனாதிபதி.

ஜெனிவா கூடும் சமயத்தில் தாங்கள் தமிழர்களுடன் சமரஷ் தீர்வு காணும் இணக்கப் பேச்சை மும்முரமாக நடத்திக் கொண்டிருக்கின்றோம், இந்தச் சந்தர்ப்பத்தில் அரசை இறுக்கி, சமரச முயற்சிகளைக் குழப்பாதீர்கள் என்று சர்வதேச உலகைச் சமாளித்து, அதன் காதில் பூச்சுத்த பேச்சுப் பல்லக்குக் கதையை ராஜபக்ஷகள் தரப்பு இப்போதைய சமயத்தில் அவிழ்த்து விட்டிருக்கின்றது.

இந்தச் சுத்து மாத்து எத்தனத்துக்கு கூட்டணி எடுபடாமல் – களப் பலியாகாமல் – தந்திரமாக நடப்பது மிக மிக அவசியமாகும்.

## கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கிழக்கில் அபிவிருத்தி வேலை திட்டங்கள்



கொவிட் வைரஸ் பரவல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் மக்கள் நல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பாலை நகர், 210 சீ தியாவட்டவான் கிராமத்தின் பிரதான வீதியின் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்த வீதி செப்பனிடப்பட்டு வருகின்றது. இந்த வேலைத்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியின் கீழ் நடைபெறும் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டமாகும்.

இந்த வீதியின் நிர்மாணப் பணிக்காக 23 ஆயிரத்து 83 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மக்கள் இந்த வீதியால் பயணம் செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இன்றைய வீதி அபிவிருத்தி பணிகளை ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் பார்வையிட்ட அவர் வீதி அபிவிருத்தி பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் கொவிட் - 19 அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நமது கிராமங்களில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மற்றும் கிராம மக்கள் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்

## அரசுக்கு கடன் வழங்கும் சீனாவின் உள்நோக்கம் பற்றி தேட வேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது



சீனா இலங்கைக்கு அரசாங்கத்திற்கு கடன் வழங்கும் பின்னணியில் இருக்கும் உள்நோக்கம் என்ன என்பதை தேடிப்பார்க்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சீனா கடன் வழங்கிய பல நாடுகளிடம் அந்தக் கடனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக அந்நாடுகளுக்குச் சொந்தமான பெறுமதியான வளங்களுக்கு உரிமை கோருகிறது. சீனா, ஆபிரிக்காவில் சாம்பியா நாட்டுக்கே அதிகளவில் கடனை வழங்கியுள்ளது.

சம்பியாவில் தங்கம், வெங்கலம், வெள்ளி போன்ற உலோகங்கள், கனிமங்கள் இருக்கின்றன. கடனை சாம்பியாவால் திரும்ப செலுத்த முடியவில்லை. அதனை எங்களிடம் கூற வேண்டாம் என சீனா கூறுகிறது.

அதற்கு ஈடாக தங்கம், வெங்கலம், வெள்ளி கனிய வளங்களை தமக்கு வழங்குமாறு சீனா கூறுகிறது. சீனா எப்படி இந்த நாடுகளுக்கு உதவுகின்றது என்று ஓர் ஆய்வு கட்டுரை பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருந்தது. அந்த பத்திரிகை நான்கு நாடுகளை உதாரணமாக எடுத்திருந்தது.

அங்கோலா, சிம்பாப்வே, மொங்கோலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை அந்த பத்திரிகை உதாரணமாக எடுத்திருந்தது.

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாது, சீனாவிடம் சென்றால், அவர்களின் நிபந்தனைகளுக்கு அமையவே செல்ல வேண்டும். நிபந்தனைகள் இன்றி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

சர்வதேச நாணய நிதியம் அந்தந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி தொடர்பிலான நிபந்தனைகளையே விதிக்கும். எனினும் நாடுகள் தமக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்வது உட்பட தனது நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பான நிபந்தனைகளையே விதிக்கும் எனவும் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

## கொவிட் தொற்றாளர்களுக்கு முப்படையினரால் சிகிச்சைகள்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் கொவிட் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமாயின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதற்காக முப்படையினர், சுகாதாரப் பிரிவில் ஓய்வுபெற்றுச் சென்ற அதிகாரிகள் மற்றும் தனியார் பிரிவில் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

கொவிட் தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு போதிய அம்புலன்ஸ் வசதிகள் இல்லையாயின் பிரதேச மட்டத்தில் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மரண எண்ணிக்கை அதிகரிப்பதால் தொற்றாளர்கள் அனைவரும் தீவிர சிகிச்சைக் கண்காணிப்புக்குள் உட்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் -40

ந.வித்தியாதரன்

ஆசிரியர் சிவநாயகம் ஐயா என்னை அழைத்தார் என்று தகவல் கிடைத்ததும் நான் பதறி அடித்துக்கொண்டு அவரின் கண்ணாடி அறைக்குச் சென்றேன். மேசையில் நான் எழுதிய செய்தி இருந்தது. செய்தியின் மேல் மூலையில் பெரிய கேள்விக்குறி போட்டு வட்டம் இடப்பட்டிருந்தது. அந்தக் குறியீடு செய்தி ஆசிரியர் போட்டது என்பது அவர் பயன்படுத்தும் பேனா மையில் இருந்து நான் புரிந்து கொண்டேன்.

*"நீங்களா இந்த நிகழ்ச்சியை கவர் பண்ண போயிருந்தீர்கள்?"* - ஆசிரியர் கேட்டார்.

நானும் *"ஓம் ஸேர்"* என்றேன்.

*"கமரா மேன் வரவில்லையா?"* - ஆசிரியர் கேட்டார்.


படப்பிடிப்பாளர் பெயர் சொன்னேன். இப்போது பெயர் மறந்து விட்டேன்.

*"அவர் என்னுடன் அல்லாமல் தனியாக வந்தார். சுவர்ணமுகி நாட்டியத்தின் படங்கள் பல எடுத்தார். பொள்ளாச்சி மகாலிங்கம் உட்பட பேச்சாளர்கள் சிலர் பேசும் படங்களை எடுத்த பின்னர்தான் அவர் போனார். நான் அவரைக் கண்டேன்."* - என்றேன்.

*"நல்லது. நீங்கள் பொள்ளாச்சி மகாலிங்கம் மற்றும் பத்திரிகையாளர் பகீரதன் ஆகியோரின் உரைகளை எழுதியுள்ளீர்கள். பகீரதனை பத்திரிகையாளர் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அவர் எந்தப் பத்திரிகை ஆசிரியர் என்பது தெரியுமா?"* - என்று கேட்டார் ஆசிரியர்.

*"அவர் பேச வரும்போது ஏதோ ஒரு பத்திரிகையின் பெயர் சொன்னார்கள். என் கவனத்தில் அது சரியாக உள்வாங்கப்படவில்லை. அதனால் விட்டுவிட்டேன்."* - என்று நான் உண்மையைப் பேசியமை ஆசிரியருக்கு திருப்தியை தந்திருக்கும் போல.

*"நீர் குறிப்பிட்ட பொள்ளாச்சி மகாலிங்கம் சுகர் ஃபேக்டரிகள் நடத்தும் பெரிய பிசினஸ் மேக்னெட். தொழிலதிபர். அவரது வலது கை தான் இந்த பகீரதன். பொள்ளாச்சி மகாலிங்கம் சக்தி மில்ஸ் போல 'கங்கை' என்று ஒரு சஞ்சிகையும் நடத்துகின்றார். அதன் ஆசிரியர்தான் இந்த பகீரதன். சென்னை இராமலிங்க மிஷன் பொதுச் செயலாளரும் கூட."* - என்றார் சிவநாயகம் ஐயா.



இராஜதுரையும் எஸ்.டி.எஸ்ஸும்.



இந்து மாநாட்டினிடையே ஆசிரியர் சிவநாயகம் ஐயாவும், பகீரதனும்

என் செய்தியில் நான் பொள்ளாச்சி மகாலிங்கத்தின் பேச்சுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து இருந்தேன். கூடவே பத்திரிகையாளர் பகீரதனும் பேசினார் என்று குறிப்பிட்டு, அவர் ஆற்றிய உரையின் சில பகுதிகளை எழுதியிருந்தேன. இந்து சமயத்தை வளர்ப்பதற்கு நாம் எல்லோரும் சமரசமாகப் பயணிக்க வேண்டும். சாதி, மத,இன,குல ஏற்றத்தாழ்வுகளை கைவிட வேண்டும் என்ற கருத்தில் அவர் பேச்சு இருந்தது. ஆதீனங்களும் சாதி பார்க்கின்றன் என்று குறிப்பிட்டு அது தொடர்பில் பகீரதன் விசனம் தெரிவித்து நொந்து கொண்டார் என நான் குறிப்பிட்டு இருந்தேன். அந்த விடயம் குறித்து அவர் கூறி, நான் எழுதாமல் விட்ட விடயங்களை எல்லாம் ஆசிரியர் என்னை ஒரு சிறு குறுக்கு விசாரணை செய்து அறிந்து கொண்டார். முதல் நாள் நடைபெற்ற அந்நிகழ்வுப் பேச்சுக்களைக் குறிப்பு எடுத்திருந்தேன். ஆயினும் அதை இப்போது தேடிப்போய் தூக்கினால் ஆசிரியர் என்ன கூறுவார் என்ற பயத்தில் நினைவில் இருந்த எல்லாவற்றையும் ஒப்புவித்தேன். ஆசிரியருக்குத் திருப்தி. என்னை அனுப்பி விட்டார்.

நான் செய்தியாளர்கள் பீடத்துக்கு வந்ததும் என் சக சீனியர் ரிப்போர்ட்டர்கள் என்னைத் துருவினார்கள். நான் நடந்தவற்றைச் சொன்னேன்.

*"பார்த்தியா ஏன் உங்களை - சின்னப் பொடியளை - பிரதான நிகழ்வுக்கு அனுப்பாமல் இப்படி சைட் நிகழ்வுகளுக்கு அனுப்புகிறார்கள் எண்டு. பொள்ளாச்சி மகாலிங்கம் எல்லாம் ஆசிரியருக்கு மிக நெருங்கிய நண்பர்கள். அவர் பற்றிய செய்தியை நீ சரியாக எழுதி இருக்க மாட்டாய். அதுதான் ஆசிரியர் கூப்பிட்டு கேட்டிருக்கிறார். செய்வன திருந்தச் செய்யுங்கோ"* - என்று தத்துவம் பேசினார் என் சீனியர் ரிப்போர்ட்டர் ஒருவர். அவர் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை.

செய்தியாளர்கள் மேசைகளைப் பார்த்தபடி எதிர்ப்புறத்தில் செய்தி ஆசிரியரின் மேசை. கானமயிலநாதனுக்கு உரியது. அவரின் தர்பாரில் நாங்கள் செய்தியாளர்கள் ஏழெட்டுப் பேர். ஒரு சமயத்தில் மூன்று, நான்கு பேர் இருப்போம். மற்றவர்கள் வெளியில் செய்தித் தேடலில் இருப்பர். மாறி மாறி போய் வந்து கொண்டே இருப்போம்.

ஞாயிறன்று தினபதி வெளிவராது. நமது வார வெளியீடான 'சிந்தாமணி' பிரசுரமாகும். தமிழ் வார வெளியீடுகளில் விற்பனையில் சாதனை படைத்த சஞ்சிகை அது. இலங்கை முழுவதும் விநியோகம். மற்றைய இரு வார வெளியீடுகளான 'வீகெண்ட்' (ஆங்கிலம்), 'ரிவிரஸ' (சிங்களம்) ஆகியவற்றுடன் விநியோகத்துக்குப் போவதால் மாகாணப் பதிப்பை சனி நண்பகலுக்கு முன்னர் முடித்துக் கொடுத்து விட வேண்டும். தினசரி தினபதி போல மாலை 6 மணி வரைப் பார்த்திருக்க முடியாது.

வழக்கமாக வியாழக்கிழமை மாலையே செய்தி ஆசிரியர் எங்களைக் கலைக்கத் தொடங்கிவிடுவார் - சிந்தாமணிக்கு தலைப்பு செய்தி ஒன்று எடுத்து வரும்படி. சிந்தாமணியின் தலைப்பு செய்திக்காக கடைசி நேரம் வரை காத்திருக்க முடியாது. ஆகவே ஓரிரு நாள் தாக்குப் பிடிக்கக் கூடிய செய்தியை முதலிலேயே தயார் பண்ண வேண்டும். அத்தோடு சிந்தாமணி முன்பக்கத் தலைப்புச்செய்தியின் பிரதான தலைப்பை வழமையாக ஓவியர் சாமி எழுத்தில் வரைந்து தருவார். அதை புளொக் செய்து அச்சிடுவார்கள். அந்த தலைப்புக்கு அச்செழுத்துக் கோர்த்துப் பயன்படுத்துவதில்லை. அத்தகைய பிரதான தலைப்புகளை வகை வகையான டிசைன்களில் ஓவியர் சாமி வரைவார். ஆனால், அதற்கு அவருக்குக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது தேவை. ஆகவே சனி காலையில் நேரத்துடன் ஞாயிறு பத்திரிகைக்கான தலைப்புச் செய்தியை முடிவு செய்ய வேண்டிய இக்கட்டு.

அவ்வாரம் ஞாயிறன்று உலக இந்து மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வு. எங்கள் சீனியர் ரிப்போட்டர் ஒருவர் அதனை பற்றி ஒரு தொகுப்பு செய்தி எழுதி இருந்தார். உலக இந்து மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் கோலாகலமாக நடப்பது போல ஒரு தலைப்பிடலாம் என்பது அவர் கருத்து.

வெள்ளி மாலையே அந்தச் செய்தியை செய்தியாசிரியரிடம் அவர் கொடுத்தார்.

அடுத்த நாள் சனி காலையில் அதைப் பார்த்ததும் செய்தியாசிரியருக்கு ஏதோ நினைவு வந்திருக்கும் போல. என்னைக் கூப்பிட்டார். நான் பத்தடி தூரத்தில் இருந்த அவரது மேசைக்குப் போனேன். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை இறுதிநாள் நிகழ்வுக்கான அழைப்பிதழ் ஒன்றைத் தூக்கி தந்தார். அதைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி. இரண்டு விடயங்களால்.

முதலாவது - எனக்கு, கனிஷ்ட செய்தியாளனுக்கு, அந்த அழைப்புத் தரப்பட்டது.

இரண்டாவது - அந்த அழைப்பிதழில் எனது பெயர் சிவநாயகம் ஐயாவின் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்தது.

எனக்கு மட்டுமல்ல எனது சீனியர்கள், சக ரிப்போட்டர்களுக்கும் அதிர்ச்சிதான்.

செய்தி ஆசிரியர் அசைன்மென்ட் கொப்பியை (நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தை) எடுத்து இறுதி நாள் நிகழ்வைக் 'கவர்' பண்ணும் மூன்று சீனியர்களுடன் நான்காவதாக என் பெயரையும் பதிந்தார்.

*"ஸேர்... கருணாரட்ணம் (உதவி ஆசிரியர்), செல்வரட்ணம் (உதவி ஆசிரியர்), தமிழ்மாறன் எல்லோரையும் 'கவர்' பண்ணப் போட்டிருக்கிறீர்கள்..."* - என்று இழுத்தேன் நான். இவ்வளவு சீனியர்கள் இருக்கையில் நான் எதற்கு என்ற மாதிரிக் கேட்டேன்.

*"எனக்குத் தெரியாது. ஆசிரியர்தான் சொன்னவர். உம்மைக் கட்டாயம் நிகழ்ச்சிக்குப் போகட்டாம். செய்தியாளர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கி உள்ளார்கள். அங்கு ஆசிரியர் கண்ணில் படுகிற மாதிரி இருந்து கொள்ளும். செய்திகளைக் கருணாரட்ணம் பார்த்துக்கொள்வார். அவர் சொன்னால் அந்தச் செய்திகளை எழுதிக்குடும்"* - என்றார் செய்தியாசிரியர்.

எனக்கு விளங்கவில்லை. நிகழ்ச்சியில் ரிப்போட்டராகப் பிரசன்னமாக வேண்டும். ஆனால் செய்தி எழுதத் தேவையில்லை. இந்த கௌரவம் எனக்குக் கொடுத்தமையால் சக ரிப்போட்டர்கள் மத்தியில் பலத்த அதிருப்தி. அவர்களின் செயல்கள், உடல் மொழியால் அதனை நான் புரிந்து கொண்டேன். அலுவலகத்தின் பிற பகுதிகளில் உள்ள ஊழியர்களுடன் அதிகம் பழகும் நமது சீனியர் ரிப்போர்ட்டர் ஒருவர். சற்று நேரத்தில் விளக்கத்துடன் வந்தார். அந்த விளக்கம் ரிப்போட்டர் மேசையில் எல்லோருக்கும் திருப்தி தந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 10

## மின்னியல்


1. மின்னோட்டம் என்றால் என்ன?

........................................................................................................

2. மின்சுற்று என்றால் என்ன?


........................................................................................................

### 10.1 மின்கலங்களையும் மின்குமிழ்களையும் தொடுக்கும் பல்வேறு முறைகள்




* மின்கலங்கள், மின்குமிழ்களினை தொடராக, சமாந்தரமாக எமது பயன்பாட்டிற்கு ஏற்ப இணைக்க முடியும்.
* இரு மின்குமிழ்களைப் பயன்படுத்தி இணைக்கப்பட்ட தொடரான, சமாந்தரமான இணைப்பு காட்டப்பட்டுள்ளது.
* அவற்றிற்கான சுற்றுவரிப் படமும் காட்டப்பட்டுள்ளது.

A - **மின்கலங்களின் தொடரான தொடுப்பு**




1. மின்கல எண்ணிக்கை அதிகரிக்க மின்குமிழ்களின பிரகாசத்திற்கு யாது நிகழும்?

........................................

2. மேலே மின்குமிழ்களின் பிரகாசம் அதிகரிக்க காரணம் யாது?

........................................

3. 2/அதற்கு மேற்பட்ட மின்கலங்கள் ஒன்றின்பின் ஒன்றாக இணைத்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

........................................................................................................

4. மின்கலங்களை ஒன்றின் பின் ஒன்றாக இணைக்கும் போது மின்கலத்தின் முடிவிடங்கள் தொடர்பாக கவனிக்க வேண்டிய விடயம் யாது? ......................

........................................................................................................

5. 2/ அதற்கு மேற்பட்ட மின்கலங்கள் தொடர்முறையில் தொடுக்கப்படும் அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

........................................................................................................

B - **மின்கலங்களின் சமாந்தரமான தொடுப்பு**

1. 3 சந்தர்ப்பங்களிலும் மின்குமிழ்களின் பிரகாசம் பற்றி யாது கூறுவீர்?


........................................................

2. மேலே அவதானத்திற்கான காரணம் யாது?

........................................................

3. மேலே மின்சுற்றை இணைக்கும் போது கவனிக்க வேண்டிய விடயம் யாது?

........................................................




4. உலர் கலங்கள் அனைத்தினதும் நேர்முடிவிடங்கள் ஒன்றாகவும் மறைமுடிவிடங்கள் ஒன்றாகவும் இணைக்கப்பட்டுள்ள தொடுப்பு முறை எவ்வாறு அழைக்கப்படும்? ..............................................

........................................................................................................

5. சமாந்தரமாக தொடுக்கப்பட்டுள்ள மின்கலத்தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்?

........................................................................................................

6. யாதேனும் மின்சாதனம் ஒன்றிற்கு நீண்ட நேரம் மின்னோட்டத்தை வழங்க வேண்டுமாயின் மின்கலங்களை எவ்வாறு இணைத்தல் சிறந்தது?


........................................................................................................

C - **தொடர் மின்குமிழ்த் தொகுதி**

1. இரு சந்தர்ப்பங்களிலும் மின்குமிழ்களின் பிரகாசம் பற்றி யாது கூறுவீர்?

அமைப்பு 1..............................................

அமைப்பு 2..............................................





2. அமைப்பு 2 இல் மின்குமிழ்களின் பிரகாசத்தை மாறாது வைக்க யாது செய்ய வேண்டும்?

........................................................

3. இங்கு தரப்பட்டுள்ள மின்தொகுதி எவ்வாறான இணைப்பு?

........................................................................................................

D - சமாந்தர மின்குமிழ்த் தொகுதி




1. இரு சந்தர்ப்பங்களிலும் மின்குமிழ்களின் பிரகாசம் பற்றி யாது கூறுவீர்?


........................................................

2. தொகுதி 2ல் தரப்பட்டுள்ள மின்தொகுதி எவ்வாறான இணைப்பு?

........................................................

சிந்தனைக்கு - இங்கு காட்டப்பட்டுள்ள சுற்றில் ஆளி S மூடப்படாத போது (திறந்த நிலை) A, B, C ஆகிய மின்குமிழ்கள் தொடரான இணைப்பில் காணப்படும்.


- ஆளி S மூடப்படும் போது A, B ஆகிய மின்குமிழ்கள் தொடரான இணைப்பிலும் மின்குமிழ் C அவற்றிற்கு சமாந்தர இணைப்பிலும் காணப்படும்.





### 10.2 எளிய மின்சுற்றுக்கள்

**மின்சூள்**

* அன்றாட வாழ்வில் மின்சூள் எனப்படும் மின் உபகரணத்தைப் பயன்படுத்துகின்றோம்.
* கீழே எளிய மின்சுற்று ஒன்று காட்டப்பட்டுள்ளது. அதைப் போல எளிய ஒரு சுற்றே மின்சூளில் காணப்படுகிறது.






1. மின்சூளில் உலர்மின்கலங்கள் எம்முறையில் இணைக்கப்பட்டுள்ளன?

........................................................................................................

2. நவீன மின்சூள்களில் இழை மின்குமிழ்களுக்குப் பதிலாக LED பாவனை அதிகரித்துள்ளமைக்கான காரணம் யாது?

........................................................................................................

3. மேலுள்ள மின்சூளின் 1, 2 ஆகிய பகுதிகளை இனங்காண்க.

........................................................................................................

4. 4, 5 என குறிக்கப்பட்டுள்ள மின்கலங்களின் முனைகளை இனங்காண்க.

........................................................................................................

### 10.3 மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்தும் துணைக்கூறுகள்

**மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்தும் துணைக்கூறுகள்**

- **ஆளிகள்**
  - **தட்டுச் சாவி** (Tap Key)
  - **செருகு சாவி** (Plug Key)
- **தடையிகள்**
  - **நிலையான தடையி** (Permanent Resistors)
  - **மாறும் தடையி** (Veriable Resistors)
  - **ஒளியுணர் தடையி** (Light Dependent Resistors)

**1. ஆளிகள்**

* **தட்டுச் சாவி** - உலோகத் தட்டை மேலே, கீழே தள்ளுவதன் மூலம் கையாளப்படும்
  * மேலே உயர்த்தல் - சுற்று திறக்கப்படும்
  * கீழே தள்ளுதல் - சுற்று மூடப்படும்
* **செருகு சாவி** - உலோக செருகு கோலை உள்நுழைத்தல், வெளியே எடுத்தல்
  * உள்நுழைத்தல் - சுற்று திறக்கப்படும்
  * வெளியே எடுத்தல் - சுற்று மூடப்படும்

1. பல்வேறு தேவைகளுக்காக ஆளிகள் பயன்படுகின்றது. கீழுள்ள A, B ஆகிய ஆளிகளை இனங்காண்க



A - .....................



B- .................................

**2 - தடையிகள்**

* நிலையான தடையி - நிலையான மாற்ற முடியாத தடைப்பெறுமானம் உடையவை.
  - நிக்ரோம், மாங்கனின் போன்ற கலப்புலோகத்தால் ஆக்கப்பட்ட தடையிகள் உயர் தடைப்பெறுமான முடையவை.
  - எல்லா மின்சாதனங்களும் குறித்த தடைப்பெறுமானத்தைக் கொண்டுள்ளன.




நிலையான தடையிகள் சில

**Note - செப்பு உலோகம் மிகக் குறைந்த தடைப்பெறுமானத்தைக் கொண்டுள்ளதால் செப்புக் கம்பிகளை மின்சுற்றுக்களில் தொடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.**

* **மாறும் தடையி** - ♦ தடைப்பெறுமானத்தை மாற்றி தேவைக்கு ஏற்ப மின்னோட்டத்தைப் பெற பயன்படும்.

சில மாறும் தடையிகள்





* **ஒளியுணர் தடையி** (LDR) - ♦ தடையிகள் மீது ஒளிபடும் போது அதன் தடைப்பெறுமானம் மாறுபடும் தடையிகள் ஒளியுணர் தடையிகள் ஆகும்.
  - ஒளிச் செறிவு கூட - தடை குறையும்
  - ஒளிச் செறிவு குறைய - தடை கூடும்

**நிலையான தடையியின் தொழிற்பாட்டை அறிதல்**


கீழ்க்காட்டியவாறு சுற்றை அமைத்து $R_L$ எனும் பகுதியில் 3Ω, 7Ω தடை இணைந்த போது

1. தடைகள் தொடுக்காத போது மின்குமிழின் பிரகாசம் எவ்வாறு காணப்படும்?

........................................................................................................

2. 3Ω தடை இணைத்த போது அவதானம் யாது?

........................................................................................................




3. 7Ω தடை இணைத்த போது அவதானம் யாது?

........................................................

4. தடையை அதிகரிக்கும் போது மின்குமிழின் பிரகாசத்திற்கு யாது நிகழும்? ..................................

5. தடைக்கும் மின்னோட்டத்திற்குமான தொடர்பு யாது?

........................................................

(மிகுதி வினாக்கள் நாளை தொடரும்....)

ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி) யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# எரிவாயு பிரச்சினைக்கு அடுத்தவாரம் நல்லமுடிவு

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, ஒக. 10

லாஃப் எரிவாயு நிறுவனம், எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக அடுத்த வாரத்திற்குள் நிதி அமைச்சகத்துடன் ஓர் உடன்பாட்டை எட்ட எதிர்பார்ப்பதாக அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

உலக சந்தையில் எரிவாயு மற்றும் எண்ணெய் விலை என்பன உயர்ந்துள்ளன.

இந்த நிலையில், லாஃப் எரிவாயுவைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்தால் நிறுவனம் நட்டமடைந்து விடும். எனவே, நிதி அமைச்சகம் மற்றும் அரச எரிவாயு நிறுவனம் என்பன நிலைமையைச் சரிசெய்ய அடுத்த வாரம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிவாயு பற்றாக்குறை, எரிவாயுவை இறக்குமதி செய்வதற்குத் தேவையான கடன் கடிதங்களைத் திறக்கும் பிரச்சினை காரணமாக உருவாக்கப்பட்டது என்று லாஃப்ஸ் கேஸ் நிறுவனத் தலைவர் கே.வி.வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்ளூர் வங்கிகளிடமிருந்து கடன்களுக்காக டொலர்கள் பெறுவதில் உள்ள சிரமம் காரணமாக இந்தப் பிரச்சினை எழுந்தது என்று அவர் கூறியுள்ளார்.

நாட்டில் அந்நிய செலாவணி பிரச்சினையால் நாட்டுக்கு இன்று கடினமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முக்கிய காரணம் கடந்த ஒன்றரை வருடமாக உலக சந்தையில் இயற்கைக்கு மாறான எரிவாயு விலை அதிகரிப்பாகும் என்றும் வேகபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

# பருத்தித்துறை சிவன் கோவிலில் பூஜைகள் நடத்துவதற்கு அனுமதி

## அமைச்சர் டக்ளஸின் முயற்சியால்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளினையடுத்து பருத்தித்துறை சிவன் கோவிலில் பூஜைகள் நடத்துவதற்கு நிபந்தனைகளுடன் சுகாதாரத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை சிவன் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்ற நிலையில், கடந்த ஐந்து நாள்களாக சுவாமி வெளிவீதி ஊர்வலம் இடம்பெற்றது.

இந்நிலையில், கொவிட் நிலைமை காரணமாகக் கோவில் திருவிழாக்கள் வெளிவீதி சுவாமி சுற்ற முடியாது என அறிவிக்கப்பட்ட நிலையில் அதனைப் பொருட்படுத்தாது சுவாமி வெளிவீதி சுற்றியதன் காரணமாக, பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரினால் கோவில் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்த விடயம் ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட சுகாதாரத் தரப்பினரைத் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுகாதார நடைமுறைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஆலய பூஜைகளை தொடர்வது தொடர்பாக பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, ஆலயத்தின் தற்போதைய பூசகருக்குப் பதிலாக, வெளியிலிருந்து பூசகர் ஒருவர் மாத்திரம் வருகை தந்து பூஜைகளை நடத்துவதற்கு சுகாதாரத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலி!

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரவிப்பாஞ்சான் குளத்துக்கு மேல் உள்ள காட்டுப் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சடலமொன்று நேற்று (திங்கட்கிழமை) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தளாய் - வென்றாசன்புர பகுதியைச் சேர்ந்த ரத்னாயக்க முதியன்சலாகே சந்தன பிரேமகாந்த் (வயது - 56) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுப் பகுதிக்கு நேற்று காலை சென்ற போது காட்டுயானை தாக்கியதாகவும் அவருடன் சென்றவர் பயம் காரணமாக ஓடி உள்ளார் எனவும் தெரியவருகின்றது.



சம்பவ இடத்துக்கு திருகோணமலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ. எஸ்.எம்.நூமி சென்று பார்வையிட்டமையுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை கந்தளாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

குறித்த மரணம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 13 வயது அக்காவை கர்ப்பமாக்கிய தம்பி

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 13 வயது அக்காவை 12 வயதுடைய தம்பி கர்ப்பமாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த 13 வயதுடைய சிறுமி வயிற்றுவலி காரணமாக கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதன் போது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் போது குறித்த சிறுமி கர்ப்பமாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வைத்தியர்கள் வைத்தியசாலை பொலிஸாருக்கு அறிக்கை சமர்ப்பித்தமையை அடுத்து ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளில் தனது தம்பி தன்னை பாலியல் துஸ்பிரயோகத்துக்குள்ளாக்கியதாக சிறுமியளித்த வாக்குமூலத்தின் பிரகாரம் 12 வயதுடைய தம்பி ஓமந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தற்போது சூம் செயலிகள் மூலம் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறுவதால் சிறுவர்கள் மத்தியில் தொலைபேசி பாவனை அதிகரித்துள்ளமையால் பிள்ளைகளின் தொலைபேசிகள் தொடர்பில் பெற்றோர் கவனம் செலுத்தாதமையும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற காரணமாக அமைந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 11

## அடர்த்தி - விடைகள்

01. முச்சட்டத்தராசு / முத்துலாத்தராசு / மும்மைக்கோல் தராசு
02. யாதாயினும் ஒரு பதார்த்தத்தின் ஓரலகு கனவளவின் திணிவு அப்பதார்த்தத்தின் அடர்த்தி எனப்படும்.
03. அடர்த்தி = $\frac{\text{திணிவு}}{\text{கனவளவு}}$
04. $gcm^{-3}$, $Kgm^{-3}$
05. $Kgm^{-3}$
06. அடர்த்தி = $\frac{\text{திணிவு}}{\text{கனவளவு}}$
$= \frac{2500kg}{5m^3}$
$= 500kgm^{-3}$
07. 1) $0.5gcm^{-3}$ 2) 1500kg 3) $250cm^3$ 4) $25kgm^{-3}$

**நீர்மானி**

01. A - அளவிடை இடப்பட்ட மெல்லிய கண்ணாடிக்குழாய்
B - ஈயச் சன்னங்கள் இடப்பட்ட கண்ணாடிக் குமிழ்
02. எண்ணெய் < நீர் < தேன்
03. 1) பாலடர்த்தி நீர்மானி
2) மதுசார நீர்மானி
3) மண்நீர்மானி
4) சவர்நீர்மானி
5) மெற்றோலக் நீர்மானி

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

# வவுனியாவில் மீண்டும் மர்மமனிதர்கள்; மக்கள் அச்சம்

வவுனியா- மதவுவைத்தகுளம் பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக அடையாளம் காண முடியாத வகையில், உடம்பு முழுவதுமாக நிறப்பூச்சுக்களை பூசிக்கொண்டு நிர்வாணமாக, பெண்கள் தனியாக இருக்கும் வீடுகளை இலக்கு வைத்தும், குடும்பத்தலைவர் வீட்டில் இல்லாத நேரங்களில் வீடுகளில் புகுந்தும், வீட்டில் தனிமையில் இருக்கும் பெண்களிடம் தகாதமுறையில் நடந்துகொள்ள முற்பட்டனர் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் நிம்மதியாக வாழ முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாக மதவுவைத்தகுளம் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வன்னி பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு பதிவு செய்தும், அவர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மர்மமனிதர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தாவிட்டால் குறித்த பிரதேச மக்கள் நிம்மதியாக இரவு நேரங்களில் இருக்க முடியாது எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தம்பதியினர் படுகாயம்

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதி கம்பகொட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கணவன் மற்றும் மனைவி படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து வருகை தந்த லொறி வீதியோரத்தில் பாக் லைட் போடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதே நேரம், அதே வழியாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர்கள் திருகோணமலை - தேவ நகர் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட கே. ரவிச்சந்திரன் (வயது 38) மற்றும் அவரது மனைவியான ஆர். பிரியதர்ஷினி (வயது 37) எனவும் தெரியவருகின்றது.

குறித்த இருவரும் விபத்துக்குள்ளான நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும், விபத்து தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் 94

**282. பேச்சுவார்த்தைகளை இந்தியாவில் நடத்துவது பற்றி இந்தியா கரிசனை காட்டியதா?**

பரந்த அளவில் இதற்கு ஆதரவில்லாவிட்டாலும் இந்திய அரசின் மேல் மட்டங்கள் இதனைக் கணக்கெடுத்து அதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதில் ஈடுபட்டன. அந்த விண்ணப்பம் வெளிநாட்டு, உள்நாட்டு, பாதுகாப்பு அமைச்சு என்று பலபேர் சம்பந்தப்பட்டதால் பேச்சுவார்த்தைகள் அதனை ஒட்டி விதவிதமான அபிப்பிராயங்களைத் தோற்றுவித்தன. அப்படியிருந்தும் இந்திய மேல் மட்டத்தில் ஓர் அனுசரணையான தீர்மானம் எடுக்கவே விருப்பம் இருந்தது. தமிழ் நாடு, காங்கிரஸ், பொது அபிப்பிராயம் என பலவற்றை மத்திய அரசு சமாளிக்க வேண்டியிருந்ததால் ஒவ்வொரு பகுதியாக சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவற்றுக்கிடையில் ஜூலை 2001இல் விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா விமான தளத்திலும் அதன் சுற்றாடலிலும் இருந்த விமான படைத் தளத்திலும் பாரிய தாக்குதல்களை நடத்தினர். கொழும்புக்கு அருகாமையிலேயே நடந்த இந்த பாரிய தாக்குதல் குறித்து, பேச்சவார்த்தைகளில் ஈடுபட்ட யாவருமே புருவங்களை உயர்த்தினர். இதனால் வெகுண்டு எழுந்த கதிர்காமல் சொல்ஹெய்ம் தனது தனிப்பட்ட அகங்கார ஆசைகளுக்காக விடுதலைப் புலிகளுக்கு தேவைக்கும் அதிகமான ஊக்கங்களும் நம்பிக்கைகளும் கொடுத்து விடுதலைப் புலிகள் இப்படியான செயல்கள் மூலம் அரசாங்கத்தை பணியவைக்கலாம் என எதிர்பார்க்கிறார், அவை பயனளிக்கப் போவதில்லை என்றும் எரிக்சொல்ஹெய்மை தூதுப் பணியிலிருந்து நீக்குமாறும் நோர்வேயின் வெளிநாட்டு மந்திரிக்கு அறிவித்தார்.



இதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசினோடும் விடுதலைப் புலிகளோடும் பேச்சுவார்த்தைகள் இழுபறிகளோடு தொடர்ந்தன. விடுதலைப் புலிகள் எரிக்சொல்ஹெய்ம் நீக்கப்படக் கூடாது என பிடிவாதமாக நின்றதால் அவர் நீக்கப்படாது, அவருடன் மேலும் சிலர் நோர்வேயின் வெளிவிவகார அலுவலகத்திலிருந்து அனுசரணையாக சேர்ந்து இயங்குவதெனவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின் 2001இல் கடைசிப் பகுதியிலேயே எரிக்சொல்ஹெய்ம், பேச்சுவார்த்தைகள் இந்தியாவில் நடைபெறுவதற்கான அபிப்பிராயங்களை இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் கேட்டார். அமெரிக்கா விடுதலைப் புலிகளின் மீதான ஒரு நம்பிக்கையீனத்தை தெரிவித்து இந்திய நிலைப்பாட்டை தாங்கள் ஏற்றுக் கொள்ளுவதாக அறிவித்தனர். இந்தியா ஒரு பதிலுக்காக வேறு சில முன்னெடுப்புக்களை எடுத்தது.

**283. அவை என்ன?**

மத்திய அரசு உள்நாட்டு அரசியலில் தங்களது கபடி விளையாட்டுக்களையும் பார்க்க வேண்டியிருந்தது. தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளை ஆதரிக்காத - அவர்களுக்கு எதிர்ப்பு நிலையில் இருந்த - ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்குகளில் அல்லல் பட்டு பதவியிலிருந்து நீங்கினார். ஆனால் ஆளுமையுடன் அண்ணா தி.மு.க. கட்சியைச் சேர்ந்த பன்னீர்ச் செல்வத்தை முகவராக முதலமைச்சர் பதவியில் அமர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

தி.மு.கவின் கருணாநிதி மத்திய அரசுடன் கூட்டாக இருந்தாலும், விடுதலைப் புலிகளுக்கு எதிர்ப்பு நிலையில்லாவிட்டாலும், தான் இந்த பேச்சுவார்த்தைகளுக்கு இடமளிப்பது ஜெயலலிதாவைப் பலப்படுத்தும் என யோசித்தார்.




இடையே இரண்டு கட்சிகளும் வரப்போகும் தேர்தலுக்கு மத்தியில் கூட்டு சேர்வதற்குக் கணக்குகள் எடுத்துக் கொண்டிருந்தனர். அண்ணா தி.மு.கவும், தி.மு.கவும் விடுதலைப் புலிகளை அனுமதித்து பேச்சுவார்த்தைகளை நடத்த விரும்பினால் மற்றைய சிறிய கட்சிகளின் எதிர்ப்புகளை பெரிதுபடுத்தாமல் விட மத்திய அரசு தயாராக இருந்தது. ஆயின் அவர்கள் சோனியா காந்தியின் காங்கிரஸையும் கணக்கெடுக்க வேண்டியிருந்தது. தமிழ் நாட்டில் அந்த நேரம் அது பலமாக இல்லாது இருந்தாலும் மற்ற மாநிலங்களில் அதற்கு ஆதரவு இருந்தது. சோனியாதான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார். ராஜீவின் கொலையாலும், அது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டது என்பதாலும் சோனியா நேரடியாக பாதிப்படைந்திருந்தார். ஆகவே அவர் அதற்கு இணங்கி வரமாட்டார் என்றும் சோனியாவை மீறி செயற்பட்டால் அவருக்கு தேர்தலில் பலத்த வாய்ப்புக்கு அது இடம் தரும் என்ற கணக்குகளும் போடப்பட்டன.

சோனியா காந்திக்கோ, சர்வதேச அரசியலை பொறுத்த மட்டில் நல்ல உள்ளுணர்வுகள் இருந்தன. தமிழ் நாட்டில் இருந்த மாநிலக் கட்சிகள் தங்கள் குறுகிய நோக்கில், சர்வதேச அரசியலை பார்த்ததிலும் பார்க்க, அவர் இதனை பெருந்தன்மையோடு பார்த்தார். பின்னாளில் சோனியாவின் ஆட்சி நடந்து போர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொடர்ந்தபோது இதனை சோனியாதான் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்காக நடத்துகிறார் என்ற பிரச்சாரங்கள் நடந்தன. ஆனால் அவர் இந்த பேச்சுவார்த்தைகள் இந்திய மண்ணில் நடப்பதற்கு வாஜ்பாய்க்கு ஆதரவாக இருந்தார். அதே சமயம் ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த நளினியினதும் முருகனினதும் மரண தண்டனைகளை ஆயுட் காலத்திற்கு குறைப்பதற்கு ஜனாதிபதிக்கு நேரடியாக அனுசரணைகள் கொடுத்தார். போர் தொடர்வதால் விடுதலைப் புலிகள் இவரையும் குறி வைப்பார்கள் என்ற புரளிகளைப் பற்றி அவர் அலட்டிக் கொள்ளாமல் தான் ஒரு தாயாக, தனது பிள்ளைகள் தந்தையை இழந்து அனுபவித்த வேதனைகள் மாதிரி, நளினி முருகனது குழந்தையும் தாய் தகப்பனின்றி வேதனைப் படக்கூடாது என்பதற்காக அவற்றைச் செய்தேன் என விளங்கப்படுத்தினார்.

அறுதியாக ஒரு தீர்மானம் தமிழ் நாட்டு அரசியலின் வாக்கு வேட்டையிலும் கட்சி ஆட்சி அமைப்பது என்பதிலுமே இருந்து அதில் எது தங்களுக்குச் சாதகமானதாக இருக்கும் என்று மத்தியும் பார்த்தது. அண்ணா தி.மு.க., தி.மு.கவின் ஒத்துழைப்பிற்காக பிரதமர் வாஜ்பாய் தனக்கு நம்பிக்கையான தனது அரசில் மந்திரியாக இருந்த வசுந்தரா ராவை ஜெயலலிதாவிடமும் கருணாநிதியுடனும் பேசுமாறு அனுப்பியும் மாநில அரசியலில் தங்களுக்கு சாதகமானவற்றை அவர்கள் பார்த்தனர்.

ஆகவே சொல்ஹெய்ம், இது பற்றி பேசுவதற்காக அடுத்த முறை புதுடெல்லி சென்றபோது இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சின் காரியதரிசி, தேசியப் பாதுகாப்பு ஆலோசனையாளர், உளவுத்துறை அதிகாரிகள் என எல்லோரும் கூட்டாக "இந்தியா கொஞ்சம் தள்ளியிருக்கவே விரும்புகிறது. பேச்சுவார்த்தைக்கு எதுவிதமான ஊக்குவிப்பும் தந்து நேரடியாக நாங்கள் ஈடுபடுவதான தோற்றத்தை தர விரும்பவில்லை. நீங்கள் தொடர்ந்தும் முயற்சி செய்யுங்கள். அவற்றைக் கவனித்து உதவிகள் செய்வோம்." – என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 'அவன் குடிகாரன் விடு; நீ என்னுடைய பிழாவைக் கவனி' என்ற கதைதான் நீடித்தது.



(வளரும்.....)

# இரு வாரங்களில் இரு கோடி நஷ்டம்

## நெடுந்தீவு மீனவர்களுக்கு



இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறை காரணமாக தமது வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றமையால், எந்த வழியிலேனும் இந்தியக் கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்துமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் வலியுறுத்தினர்.

மேலும் கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் நெடுந்தீவு கடற்றொழிலாளர்களுக்கு இரண்டு கோடியே 13 லட்சத்து 28 ஆயிரம் ரூபா நஷ்டத்தை இந்தியக் கடற்றொழிலாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சமாசங்கள் மற்றும் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்குறித்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் உட்பட தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைக் கட்டுப்படுத்துமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களால் தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில், இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சமாசங்கள் மற்றும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில் இந்தியக் கடற்றொழிலார்களின் அத்துமீறல் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

மேலும், சுருக்கு வலை, உள்ளூர் இழுவைப் படகு, வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், குழை போட்டு மீன் பிடித்தல் போன்ற சட்ட விரோத தொழில்முறைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கருத்தையும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

மேலும், புரெவிப் புயலால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தருமாறும், நீதிமன்றத்தின் ஊடாக அரசுடைமையாக்கப்பட்ட இந்தியக் கடற்றொழிலாளர்களின் படகுகளை விற்பனை செய்து, கிடைக்கின்ற பணத்தை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்

கடல் தொழில் நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் ஒழுங்குபடுத்தும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஒழுங்கு விதிகளில், யாழ். மாவட்டத்தில் மூன்றரை இஞ்சி வலையைப் பயன்படுத்தி 16 கடல் மைல்களுக்கு அப்பால் சுருக்கு வலை தொழிலில் ஈடுபட அனுமதியளிப்பது தொடர்பாகப் பிரஸ்தாபித்தார்.

அதேபோன்று, இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு இன்னும் சில மாதங்களில் நிரந்தரமான தீர்வு பெற்றுத் தருகிறேன்என உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனியார் கடலட்டை ஏற்றுமதியாளர் ஒருவரின் ஒத்துழைப்புடன் பிரதேச மக்கள் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் வகையிலான நிபந்தனைகளுடன் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, 2017 ஆம் ஆண்டில் இருந்து உள்ளூர் இழுவைப் படகு தடை செய்யப்பட்டுள்ள போதிலும், நாரா எனப்படும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி ஆராய்ச்சி முகவர் நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் உள்ளூர் இழுவை வலைப் படகு தொழிலில் தற்காலிகமாக ஈடுபட முடியும் என்றும் மீறுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இறுக்கமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், கடற்றொழிலாளர் சமாசங்கள் மற்றும் சங்கங்களின் பூரணமான ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் வெளிச்சம் பாய்ச்சுதல் மற்றும் குழை போட்டு கணவாய் பிடித்தல் போன்ற சட்ட விரோத தொழில் முறைகளைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, தீவகத்தைச் சேர்ந்த கடற்றொழில் சங்கங்கள் பண்ணை முறையில் கடலட்டை, மீன், நண்டு மற்றும் இறால் வளர்ப்பில் ஈடுபடுவதற்கு விரும்புமாயின் ஒவ்வொரு சங்கத்துக்கு தலா பத்து ஏக்கர்களை ஒதுக்கித் தருகிறேன் என உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆழ்கடல் பலநாள் மீன்பிடித் தொழில் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்பான விவரங்களைத் தருமாறும் கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தடைகளைத் தகர்த்தெறிந்து ஆசிரியர் சங்கத்தால் பேரணி!

## யாழில் நேற்று நடந்தது

24 வருட அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்கு, கொத்தலாவல சட்டமூலத்தை கிழித்தெறி, இலவச கல்விக்கான நெருக்கடிகளை நீக்கு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நாடு பூராகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ். நகரில் வாகனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் இருந்து ஆரம்பித்து யாழ். நகர வீதி வழியாக யாழ். மாவட்ட செயலகத்தை சென்றடைந்து குறித்த வாகனப் பேரணி நிறைவு பெற்றது.

வாகனப் பேரணி ஆரம்பமாகி நகரை அடைந்த போது பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் குறித்த பேரணி நடத்த முடியாது எனத் தடுத்து நிறுத்த முற்பட்டனர்.

வாகனப் பேரணியில் சென்று தான் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக இடைவெளி பேணி தொடர்ந்து செல்வதாக தெரிவித்து குறித்த வாகனப் பேரணி தொடர்ந்தது. 500 இற்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வாகன இறக்குமதிக்கு அடுத்த ஆண்டும் தடை

வாகன இறக்குமதிக்கான தற்காலிகத் தடையை அடுத்த ஆண்டுக்கும் தொடர்வதற்கு அராசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாகன இறக்குமதிக்கான தடையின் மூலம் அரசாங்கத்தால் 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் நிதியைசேகரிக்கமுடிந்துள்ளதாககருவூல திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் அடுத்த ஆண்டும் வாகன இறக்குமதிக்கான தடையை அரசாங்கம் தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளதாக பெயர் குறிப்பிடாத அந்த அதிகாரியின் தகவல்களை மேற்கொள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் நோக்கில், 2020 மார்ச் மாதம் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் தற்காலிகத் தடை விதித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சாரதியைத் தாக்கி ஓட்டோ கொள்ளை ஒருவர் கைது



அநுராதபுரத்தில் சாரதியை தாக்கி ஓட்டோவைக் கொள்ளையிட்ட இரு சந்தேகநபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஓட்டோ ஒன்றில் ஏறிய இரு நபர்கள் அதன் சாரதியிடம் குறிப்பிட்ட இடமொன்றுக்கு செல்ல வேண்டும் எனக் கூறி , செல்லும் வழியில் சாரதியைத் தாக்கி ஓட்டோவைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அநுராதபுரம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய கொள்ளையிடப்பட்ட ஓட்டோவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவராவார். ஏனைய சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# 1,000 கிராமியப் பாலங்கள் இந்த வருடம் நிர்மாணிப்பு

## அமைச்சர் ஜோன்ஸ்டன் உத்தரவாதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ‘கிராமங்களை இணைக்கும் இதயத்தின் பாலம்’ என்றகருப்பொருளின்கீழ்நாடுமுழுவதும்செயல்படுத்தப்பட்ட 5 ஆயிரம்’ கிராமிய பாலங்களை நிர்மாணிக்கும் திட்டத்தின் மீளாய்வுக் கூட்டம் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் தலைமையில் நெடுஞ்சாலை அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

இந்தப்பாலம்நிர்மாணிக்கும்திட்டத்தைவிரைவுபடுத்துமாறு மக்கள் பிரதிநிதிகள், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் அமைச்சரை சந்தித்த மக்கள் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த வருடம் 1,000 பாலங்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன. 700 இற்கும் மேற்பட்ட கிராமப்புற பாலங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ், கிராமத்தின் இதயம் பாலம் திட்டமானது நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் முழுமையான மேற்பார்வையின் கீழ் நாடளாவிய ரீதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் இலங்கையில் உள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றமையால், நாட்டில் தற்போதைய கொரோனாத் தொற்றுநோய்க்கு மத்தியிலும், திட்டமிட்டவாறு தடையின்றி எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கினார்.

2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 1,000 கிராமப் பாலங்களை நிர்மாணித்து கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை இலகுபடுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நோயால் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதால் பாலம் நிர்மாணிக்கும் திட்டம் தாமதமாகி வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

ஊழியர்களை சுகாதாரப் பரிந்துரைகளின் படி பாதுகாப்பாக அழைத்து வரவும், பால நிர்மாணப் பணியைத் தொடரவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் நிலுவையிலுள்ள வழக்குகளை ஆண்டு இறுதிக்குள் முடிக்க ஏற்பாடு

## நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அல்லது நிலுவையில் உள்ள வழக்குகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து நிலுவையில் உள்ள அல்லது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என தலைமை நீதிபதி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அதன்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்கவும் குற்றச்சாட்டுகள் இல்லை என்றால் அவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் அலி சப்றி தெரிவித்தார்.

இருப்பினும் குறிப்பிட்ட வழக்குகளில் குறித்து தனிப்பட்ட முறையில் கருத்து கூற முடியாது என குறிப்பிட்ட அமைச்சர், பயங்கரவாத தடைச் சட்டத்தின் சில சரத்துக்களை திருத்துவது தொடர்பான பணிகள் இடம் பெற்றுவருகின்றன எனவும் கூறினார்.

# கம்பஹா பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்க யோசனை

கம்பஹா மாவட்டத்தில் பாடசாலை மாணவ, மாணவியருக்கு கொவிட் தடுப்பூசி வழங்குகின்றமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் 12 வயது முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவ மாணவியருக்கு இவ்வாறு தடுப்பூசி வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் 12 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவ, மாணவியர் மூன்று லட்சம் பேர் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் ஊடகத்துறையின் .............

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

*"அது நாளைக்கு இறுதி நாள் நிகழ்வில் பங்குபற்றுகின்ற எல்லோருக்கும் ஒவ்வொரு பிரதி சிந்தாமணி மண்டப வாசலில் வைத்து இலவசமாகக் கொடுக்க ஏற்பாட்டை அமைச்சரும், ஆசிரியரும் செய்திருக்கின்றார்கள். ஐந்நூறு பிரதிகள் மேலதிகமாக அச்சிட ஓடர் கொடுத்திருக்கிறார்கள். விளம்பரப் பிரிவுதான் அங்கு அதை விநியோகிக்கும். அதுக்கு எடுபிடிக்குத்தான் வித்தியை ஒழுங்குபடுத்தி இருக்கிறார் ஆசிரியர் போல"* - என்றார் அவர். மற்றவர்களும் என்னைப் பார்த்து நக்கல் சிரிப்புடன் தலையசைத்துக் கொண்டனர். எனக்கு அப்படித் தோன்றவில்லை. அப்படி இருந்தால் அது பற்றிய ஒழுங்கு, ஏற்பாடுகள் எனக்குக் கூறப்பட்டிருக்கும். உதவி ஆசிரியர்கள் கருணாரட்ணம், செல்வரட்ணம் போன்றோருடன் செய்தியாளர் பகுதியில் இருக்கும்படி செய்தியாசிரியர் என்னை வழிப்படுத்தி இருக்க மாட்டார் என எனக்குள் நினைத்துக் கொண்டேன்.



சிந்தாமணி

CHINTAMANI

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

# ஆதீனங்களே சாதி பார்த்தால் இந்து சமயம் வளர முடியுமா?

காஞ்சி, திருப்பனந்தாள், தருமபுரம் சகலரையும் சாடுகிறார் பகீரதன்

சுவர்ணமுகி

கொழும்பு, ஏப். 25

இந்து இளம் குரு மகா சந்நிதானங்கள், ஆதீனத் தலைவர்கள், மடாதிபதிகள் ஆகியோரை புதிதாகத் தெரிவு செய்யும் போது இந்து மத ஆதீனங்களே சாதிப் பாகுபாடு காட்டுகின்றன.

காஞ்சி, திருப்பனந்தாள், தருமபுரம் உட்பட தமிழ் நாட்டில் உள்ள சைவ மடாதிபதிகளும் சாதி வேறுபாட்டை வளர்க்கின்றனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது இந்து சமயம் தேய்வதைத் தவிர, எப்படி வளர முடியும்?

ஒடுக்கப்பட்ட இந்துக்கள் இஸ்லாம் மார்க்கத்திலும், கிறிஸ்தவ மார்க்கத்திலும் சேர்வதை எப்படித் தடுக்க முடியும்?

பிரேரணைகள் கொண்டு வருவது தவிர்க்கப்பட வேண்டும்

இந்து மாநாட்டில் இப்படியும் ஒரு கோரிக்கை எழுந்தது

பழந்தமிழர் மரபு குறித்து பல்கலைக்கழகங்கள் சரிவர ஆய்வு நடத்தவில்லை

பொள்ளாச்சி மகாலிங்கம் கண்டனம்

நிறைவு விழா இன்று பிரதமர் பிரதம அதிதி

நெஷனல் 45 செ.மீ. கலர் டெலிவிஷன்

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

சிந்தாமணியின் முற்பக்க தலைப்புச் செய்தியில் முதல் இரண்டு வரிகளே எழுத்தில் வரையப்படுவது. அடுத்த இரண்டு (பெரும்பாலும் இரண்டு வரிகள்) உப தலைப்புகளும் அச்சு எழுத்துக்களில் கோர்க்கப்படுவது.

நேரத்துடன் ஓவியர் சாமி தான் வரைந்ததை செய்தி ஆசிரியரின் அங்கீகாரம் பெறுவதற்குக் கொண்டுவந்தார். அதைப் பார்த்ததும் எனக்கு விடயம் விளங்கிவிட்டது. என் சக ரிப்போட்டர்களுக்கு விடயம் விளங்கவில்லை.

**ஆதீனங்களே சாதி பார்த்தால்**
**இந்துசமயம் வளர முடியுமா?**

- என்று இருந்தது.

*"என்ன ஆசிரியர் 'சேம் சைட் கோல்' அடிக்கிறார் போல"* - என்றார் ஒரு சக ரிப்போர்ட்டர்.

சற்று நேரத்தில் முழுச் செய்தி வடிவத்தில் புறுவ் வந்தது. தலைப்புச் செய்தியில் 'சிந்தாமணி நிருபர் ந.வித்தியாதரன்' என என் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது.

**ஆதீனங்களே சாதி பார்த்தால்**
**இந்துசமயம் வளர முடியுமா?**
**காஞ்சி, திருப்பனந்தாள், தருமபுரம்**
**சகலரையும் சாடுகிறார் பகீரதன்**

- என்ற தலைப்பின் கீழ் செய்தியாளராக என் பெயர் போடப்பட்டிருந்தது. (முழுப் பத்திரிகையின் முன் பக்க வடிவமும் தனிப்படமாக தொடர்ச்சிப் பக்கத்தில் பிரசுரமாகின்றது. கட்டுரையின் முன்பக்கத்தில் அந்த வடிவம் பிரசுரமானால் அது வாசகர்களுக்கு இன்றைய தொடரின் சுவாரஷியத்தைக் குறைத்து விடும் என்பதால் அது தொடர்ச்சிப் பக்கத்தில் இடம்பெறுகின்றது.)

மூன்று ஆதினங்களும் அடுத்தநாள் மேடையில் நேரில் பிரசன்னமாகின்றார்கள். அதுவும் ஆசிரியரின் நண்பரான அமைச்சர் இராஜதுரை நடத்தும் விழா. அவரின் மற்றொரு நண்பரான லக்ஷ்மண ஐயர் தலைமையில் நிகழ்வு. பிரதமர் பிரேமதாஸா பிரதம அதிதி. உலகெங்கும் இருந்து பல நூற்றுக்கணக்கில் இந்துமத பீடங்களின் பெரியவர்களும், தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் மாநாடு.

மாநாட்டுக்கு வந்திருக்கும் ஆதினங்களுக்கு சூடு கொடுக்கும் விதத்தில் - அதுவும் சர்ச்சைக்குரிய சாதி விவகாரத்தைக் கிளறி, அதற்கான குற்றச்சாட்டை ஆதீனங்கள் மீது சுமத்தி - செய்தியையும் தலைப்பாக எழுதிப் பிரசுரித்து, அது அடங்கிய பத்திரிகையை மண்டபவாசலில் வைத்து மாநாட்டுக்கு வருவோர் எல்லோருக்கும் இலவசமாக விநியோகிக்க ஏற்பாடு செய்கிறார் ஆசிரியர்.

அதுதான் - ஊடக ஜாம்பவான் சிவநாயகம்.

இதில் இன்னொரு விடயத்தையும் பின்னர் புரிந்து கொண்டேன். தலைப்புச் செய்தியில் நடுநாயகமாகச் சிக்கலில் மாட்டிக் கொண்ட பகீரதன் கூட ஆசிரியர் சிவநாயகத்திற்கு மிக நெருங்கிய நண்பராம்.

அன்றுதான் பத்திரிகைத் துறையின் முக்கிய ஒரு பாடத்தை சிவநாயகம் ஐயாவிடம் நான் நேரில் படித்தேன். அதுதான் தினபதிக்குப் பிறகு - வெளியில் - கடந்த 38 ஆண்டுகளாக வெற்றிகரமான ஓர் ஊடகவியலாளனாக என்னைப் பயணிக்க வைத்து இருக்கின்றது என்பது என் கணிப்பு.

அதை நாளை வாசகர்களுடன் மிக விரிவாக பகிர்வேன். அதற்கு இந்தச் செய்தி பற்றிய சம்பவத்தை கொஞ்சம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

(வளரும்.....)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆபத்தான கட்டத்தில் இலங்கை; அடுத்த மாதம் மிகவும் அவதானம்



## மக்களுக்கு இராணுவத் தளபதி எச்சரிக்கை

**“இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளதால் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றோம். அடுத்த ஒரு மாத காலம் மிகவும் அவதானம். எனவே, அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார விதிகளை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.”**

**- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

ஊடகங்களிடம் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனாத் தொற்றுக்கு எதிராகத் தடுப்பூசி பெறாதவர்கள் இருந்தால் முடிந்தளவு விரைவில் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது தடுப்பூசியும் விரைவில் வழங்கப்படலாம். கொரோனாவால் தற்போது அதிகமாக உயிரிழப்பவர்கள் 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி பெறாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதுவரையில் இராணுவத்தினரால் கொழும்பு விகாரமஹா தேவி பகுதியில் அஸ்ட்ரா ஜெனெக்காவின் இரண்டாவது தடுப்பூசியும், சினோபோர்ம் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசியும் வழங்கப்படுகின்றது.

இதனால் மக்கள் முடிந்தளவு வேகமாகத் தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதன்போதும் சுகாதாரப் பிரிவு வழங்கும் ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றுங்கள் – என்றார்.

## பருத்தித்துறையிலும் ஆசிரியர்கள் போராட்டம்




**(எஸ்.நிதர்ஷன்)**

சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைக்கக் கோரியும், சேர் ஜோன் கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிராகவும் பருத்தித்துறையில் ஆசிரியர் சமூகத்தினர் நேற்று கவனவீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி கல்வி வலய இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் அதிபர் சங்கம் ஆகியன இணைந்து அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற் சங்கமாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வைக் கேட்கவில்லை;

எமது சம்பளத்தையே கேட்கின்றோம், பிள்ளைகளின் கல்வியைச் சிதைக்காதே, கல்வியை உறுதிப்படுத்து, அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டைத் தீர்த்துவை, இலவசக் கல்வியை இராணுவமயமாக்காதே, இருபத்து நான்கு வருட அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வை வழங்கு, கொரோனாப் போர்வையில் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடாதே உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடைபெற்றது.

முன்னதாக பருத்தித்துறை நகரிலிருந்து பேரணியாக ஆரம்பமாகிய போராட்டம், பருத்தித்துறை நவீன சந்தை சுற்று வீதியால் பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடைந்து நிறைவுற்றது.

இந்தப் பேரணியில் வடமராட்சி கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்களின் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த 14 சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

## பண்ணைக் கடலில் தவறி வீழ்ந்த இளைஞர் நேற்று சடலமாக மீட்பு!

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், பண்ணைக் கடலில் தவறி விழுந்து காணாமல்போன இளைஞர், நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 31 வயதுடைய வி.கௌதமன் எனும் இளைஞரே இவ்வாறு சடலமாக பண்ணைப் பாலத்தடியில், நேற்றுமுன்தினம் மாலை, குறித்த இளைஞர் தனது நண்பர்களுடன் பொழுதைக் கழித்துக் கொண்டு இருந்த வேளை தவறி விழுந்துள்ளார்.

தவறி விழுந்தவரை பாலத்தின் கீழான நீரோட்டம் அடித்துச் சென்றிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை சுமார் 2 மணி நேரங்களுக்கு மேலாகக் கடற்படையினர் தேடுதல் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில், பண்ணைக் கடலில் நேற்று காலை, குறித்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மகனின் வெறியாட்டத்தில் தந்தை பரிதாப உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், பாலையூற்றுப் பகுதியில் மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழந்துள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் திருகோண மலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தந்தை சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலையூற்று – மயான வீதியில் வசித்து வரும் 60 வயதான பொன்னத்துரை ராஜா என்பவரே இவ்வாறு மரணித்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி இரவு 9 மணியளவில் வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக மகன் தன் தந்தையைத் தலையில் தாக்கி காயம் ஏற்படுத்திய நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை தீவிர சிகிச்சை பிரிவில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தாக்குதல் தொடர்பில் மகனைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பயணத்தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எழுமாறான தீர்மானங்களைக் கொண்டே நடைமுறைப்படுத்த நினைக்கும் முயற்சிகள் இறுதியாகப் பாரதூரமான முடிவுகளை வெளிப்படுத்தும். கொழும்பு அல்லது மேல் மாகாணத்தைப் பொறுத்த வரையில் மிக அச்சுறுத்தலான நிலை காணப்படுகின்றது.

இன்று வைத்தியசாலைகளில் உள்ள ஏனைய நோயாளர்கள் அனைவரையும் வீடுகளுக்கு அனுப்பி விட்டு முழுமையாகக் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்காக வைத்தியசாலைகளை நடத்த வேண்டிய நிலை உருவாகி வருகின்றது. எனவே, மக்களின் அநாவசிய நடமாட்டங்களுக்கு இனியும் இடமளித்தால் நிச்சயமாக இந்தியாவின் நிலையை இங்கும் எதிர்கொள்ள நேரிடும்.

ஆகவே, உடனடியாகப் பயணத்தடையை அரசு அமுல்படுத்த வேண்டும். மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை மட்டுமல்லாது மாவட்டங்களுக்கு இடையிலும் பயணத்தடையை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இயலுமானால் இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக முழு முடக்கத்தை அறிவித்து நிலைமைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது சிறந்தது – என்றார்.

## கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கப்படவுள்ளனர். ஏனைய எவரும் ஆலய வழிபாட்டுக்கும் செல்ல முடியாதவாறு தடை செய்யப்படவுள்ளது.

ஆலய வழிபாட்டுக்காக அனுமதிக்கப்படுபவர்கள் பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய உற்சவம் கொரோனா அச்சம் காரணமாக இம்முறை மிகவும் இறுக்கத்துடனேயே இடம்பெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## யாழ்.தெல்லிப்பழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஆலய பரிபாலன சபை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நோய் காரணமாக மாவட்ட சுகாதார அதிகாரி, வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர், யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோர் வழங்கிய ஆலோசனைக்கமைய சமூகப்பொறுப்புடன் மஹோற்சவ காலம் தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருவிழா யாவும் உள்வீதியில் மட்டுமே நடைபெறும். உபயகாரர் மட்டும் உள்ளே அனுமதிக்கப்படுவர். உள்வீதியில் மட்டும் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும். ஆலய வெளி வீதியில் தரிசிக்க வரும் பக்தர்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றி சுகாதார விதிகளைப் பேணி வழிபாடு செய்தல் வேண்டும். இயன்றவரை சிறுவர்கள், முதியோர்கள் வீட்டில் இருந்து வழிபாடு செய்யுங்கள்.

காவடி நேர்த்திகள், வீதிப்பிரதிஷ்ட்டை தவிர்க்கப்பட்டுள்ளது. வியாபார நிலையங்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

இயன்றவரை மிக அமைதியாக அம்பாளின் திருவிழா நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் – என்றுள்ளது.

# கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலகுவது பழிவாங்கும் செயற்பாடு என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஒக. 10

ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலகுவது என்பது பழிவாங்கும் செயற்பாடாகவே கருதப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கமும் நாடும் சுகாதார அவசர நிலையை எதிர்கொள்ளும் நேரத்தில் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறினார்.

தற்போது நிலவும் கொரோனா நிலைமை காரணமாக, திட்டமிட்டபடி பாடசாலைகளை மீண்டும் திறக்க முடியாது என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எனவே அவர்கள் பாடத்திட்டத்தை உள்ளடக்க ஒன்லைன் கல்வி முறையை சார்ந்திருக்க வேண்டும் என கல்வி அமைச்சர் கூறினார்.

இருப்பினும், தொடரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, மாணவர்களுக்கான ஒன்லைன் கல்வி நடவடிக்கைகளை தொடர முடியாதுள்ளது என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.



## கொழும்பில் ஒருநாளில் உச்சம்தொட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்கள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் அதிகளவான தொற்றாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகி உள்ளனர் என கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய களுத்துறை மாவட்டத்தில் 852 கொவிட் தொற்றாளர்கள் பதிவாகி இருந்தனர். அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 319 பேரும் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர்.

## அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 18 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். 18 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான திட்டம் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

# தடுப்பூசிகள் பற்றிய வதந்திகளால் பலர் தடுப்பூசி போடாமல் உள்ளனர்

கொழும்பு, ஒக. 10

வதந்திகள் காரணமாக கொழும்பில் 60 வயதுக்கு மேற்பட்ட 40 ஆயிரம் பேர் இதுவரை தடுப்பூசி செலுத்தாமல் உள்ளனர் என வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் வதந்திகள் காரணமாக இவர்கள் தடுப்பூசி போடுவதைத் தவிர்த்துள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன இதனைக் குறிப்பிட்டார்.

ஒருவகை தடுப்பூசி மற்றொன்றை விட சிறந்தது அல்லது ஒரு குறிப்பிட்ட பிராண்ட் மட்டுமே வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு சிறந்தது போன்ற வதந்திகள் காரணமாக பலர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மறுக்கின்றனர் எனக் கூறினார்.

கிடைக்கக்கூடிய அனைத்துத்தடுப்பூசிகளும் பயனுள்ளனவாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், எவ்வாறாயினும் உயிரிழப்புகளைத் தடுக்க, கிடைக்கக்கூடிய தடுப்பூசியை மக்கள் தாமதமின்றி பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

## ரிஷாத் மனைவி உட்பட நால்வர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஒக. 10

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உட்பட நால்வர் தாக்கல் செய்த பிணை மனுவை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அத்துடன் குறித்த நால்வரையும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.




## விழிநீரால் அஞ்சலிக்கின்றோம்

**திரு.எஸ்.கதிர்காமநாதன் (சுவிஸ் நாதன்) அவர்களின் தாய்**

**திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி**



எமது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு - குறிப்பாக புற்றுநோய் வைத்தியசாலைக்கு பல் வேறு வழிகளிலும் உதவித் திட்டங்களையும் நோயாளர்களுக்கான சேவைகளை சிறப்பாக வழங்க நாம் வேண்டும் நேரமெல்லாம் உதவிக்கரம் நீட்டும் கொடை வள்ளல் சமூக சேவை ஞானி திரு.எஸ். கதிர்காமநாதன் (சுவிஸ் நாதன்) அவர்களின் தாய் திருமதி.சுப்பிரமணியம் அன்னலட்சுமி அம்மையார் அவர்கள் கடந்த 02.08.2021 அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா மீண்டும் பிறப்பற்ற நித்திய பேரின்பப் பெருவாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**ஆதார வைத்தியசாலை,**
**தெல்லிப்பழை.**

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2021 இல் வெளியிடப்பெற்றது.